ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2046/11 - 2017 නොවැම්බර් මස 21 වැනි අඟහරුවාදා - 2017.11.21

*2046/11 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டம்***

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1980 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நகர அபிவிருத்திக் கருத்திட்ட (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், மாநகர மற்றும் மேல்மாகாண விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பரிந்துரையின்பேரின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள* I *ஆம்* II *ஆம் இலக்க அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டுகள் முறையே கலப்பு முறையிலான அபிவிருத்தி (வீடமைப்பு) கருத்திட்டத்திற்காகவும் மற்றும் வசதி குறைந்த வாழ்விடங்களின் குடியிருப்பாளர்களை மீள்குடியமர்த்துவதற்கு மாடி வீடுகளை அமைப்பதற்காகவும் தேவையாக உள்ளதென்பது எனது அபிப்பிராயமானதால் சொல்லப்பட்ட காணிகள் குறித்த நோக்கங்களுக்குத் தேவைப்படுகின்றதென இக்கட்டளையின் மூலம் பிரகடனப்படுத்துகின்றேன்.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு - 01,*
*2017, நவெம்பர் 20.*

**அட்டவணை** I

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கெஸ்பாவை பிரதேச செயலகப் பிரிவின் சுவாரபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும், நிலஅளவையாளர் நாயகத்தினால் 2017.05.29 ஆந் திகதியன்று அளந்து தயாரிக்கப்பட்ட முன்னீட்டுச் சுவடி இல. CO/KSB/2017/150 இன் துண்டு இல. 01 இல். காட்டப்படுகின்ற 12ஏ . 0 றூட் 28.3 பேர்ச் (4.9277 ஹெக்டயார்) விஸ்தீரணம் கொண்ட காணிப்பகுதியின் எல்லைகள் பின்வருமாறு:-

வடக்கு : தளவரைபட இல. 521201 இன் பிரிவு இல. 04 இன் துண்டு இலக்கங்கள்: 39, 27, 26, 24, 23, 22, மொறட்டுவை வீதி (தளவரைபட இல. 521201 இன் பிரிவு இல. 04 இன் துண்டு இல. 1) தளவரைபட இல. 521201 இன் பிரிவு இல. 04 இன் காணித்துண்டு இலக்கங்கள்: 20, 21, 19, 16, 15, 46, 9 மற்றும் 56;


*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*